Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 4



# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

| மலர் 42 | கீலக சித்திரை 1969 ஏப்ரல் | இதழ் 4 |
|---|---|---|

உள்ளுறை | பக்கம்



இதழாசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

## சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 27–4–69 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, பிறபொருள்கள்பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

திரு. கு. ப. முருகேச முதலியார்
(23-25, வெல்லப்பிறந்தான் முதலி தெரு,
சிதம்பரம்,
தென்னுற்காடு மாவட்டம்.)

அவர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நம் சமாஜப் பேரன்பரும் செயற்குழு உறுப்பினருமாகிய சைவத திருவாளர் பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் அவர்கள் எம். ஏ , தம் திருமகனர் திரு. சிவகுமாரன் அவர்கள் திருமண நினைவாக நம் சமாஜத்திற்குச் சமயக் காணிக்கையாக ரூ. 25/- (இருபத்தைந்து) அன்பளிப்பாக வழங்கினுர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்கள் செயல் பிற சைவப் பெருமக்களால் பின்பற்றத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் சார்பில் 30—3—69 மாலை ஸ்ரீலஸ்ரீ நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் நினைவு நாள் விழா சபா நிலையத்தில் கொண்டாடப் பெற்றது. திரு. நே. த. கிருட்டினசாமி எம். ஏ., பி. டி. அவர்கள் தலைமையில் திரு. ஔவை. து. நடராஜன் அவர்கள் எம் .ஏ., எம். லிட் "கதிரைவேற்பிள்ளையின் மாண்பு" என்பது பற்றி விரிவுரையாற்றினுர்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் ளாடு.

| மலர் 42 | கிலக ஞூ சித்திரை 1969 ஏப்ரல் | இதழ் 4 |
|---|---|---|


## சில திருமுறைக் குறிப்புக்கள்.

### திருக்கடவூர் மயானம்

ஆசிரியர்

திருமுறைகளை முறையாக ஓதி வரும்போது. ஓதுபவருடைய பக்குவத்திற்கும், ஈடுபாட்டுக்கும் ஏற்ப, பதிகங்கள் சிறப்பான செய்திகளைப் புலப்படுத்தி வருவதும் மனஆறுதல் அளிப்பதும் உணரமுடிகிறது மிகப்பலவான பாசுரங்கள் இவ்வாறு உணர்த்துகின்றன. ஒரு சிறப்பை மட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

திருக்கடவூர் (திருக்கடையூர்) என்ற தலத்தில் இரண்டு பெரும் கோயில்கள் உள்ளன. ஒன்று பெருஞ்சாலை யருகே உள்ள கடவூர் வீரட்டம்; மார்க்கண்டனுக்காக யமனை உதைத்த தலம். மூவரும் பாடியது. இத்தலத்து அபிராமி அம்மையை வணங்கி அனேகர் வேண்டிய வரமெல்லாம் பெற்றிருக்கிறார்கள்; சித்தாந்த இதழ்களிலும் சில குறிப்பிடப் பட்டுள்ளன.

மற்றொரு தலம் இவ்வீரட்டத்திலிருந்து ஒருமைல் வடக்கே மணற்காட்டினுள் அமைந்திருக்கிறது. போகிற வழியெல்லாம் மணல்; இதுவும் பெரிய கோயில்; பழைய செங்கற்

கோயில் இது திருக்கடவூர் மயானம் என்றும் சொல்லப் பெறு கிறது. இதுவும் மூவர் தேவாரமும் பெற்றதலம். இத்தலத் திற்குரிய மூவர் தேவாரங்களிலும் உள்ள ஒரு பொதுச் சிறப்பை மட்டும் இங்கு சைவ மக்கள் அறிய வேண்டுவது.

சம்பந்தர் இத்தலத்தை வணங்கி 'வரியமறையார்' என்ற காந்தாரப் பண்ணில் பதிகம் பாடினார் அப்பர் சுவாமிகள் 'குழைகொள் காதினர்' என்ற திருக்குறுந்தொகை பாடினார். சுந்தரமூர்த்தி 'மருவார் கொன்றை மதி சூடி' என்ற பதிகம், பழம்பஞ்சுரப் பண்ணில் பாடினார். இங்கு சுவாமி திரு நாமம் பிரமபுரீசர் என்றிருந்த போதிலும்கூட, மூவர் தேவாரத்திலும் 'கடவூர் மயானம் அமர்ந்த (பெரிய) பெரு மானடிகள்' என்றே வருவது நோக்கத்தக்கது. பெருமானடி கள் என்ற தொடர் பொதுவாக இறைவன் என்று பொருள் படினும், சிறப்பாக இத்தலத்திற்குரிய இறைவன் திருப்பெயர் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இனி இப்பெருமானடிகள் இத்தலத்தில் அடியாருக் கெல்லாம் அருளுகின்றார் என்பதைச் சிறப்பாக மூவரும் கூறி யிருப்பதையே இங்கு நாம் கூற எண்ணுகிறோம்.

மூதலாவது சம்பந்தர் பாடல் (1–80)

பாசமான களைவார் பரிவார்க் கமுத மனையார்
ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார்கடவூர் மயானம் அமர்ந்தார்
பேசவருவா ரொருவர் அவரெம் பெருமா னடிகளே.

இங்கு சம்பந்தர் 'ஆசை தீரக் கொடுப்பார்' என்று கூறு வது அறியத்தக்கது. அடுத்து அப்பர் திருக்குறுந் தொகை; எட்டே பாடல்கள் கிடைக்கின்ற இப்பதிகத்தில் (5-38), ஐந்து பாடல்களில் பெருமானடிகள் செய்யும் அருளைப் பேசுகிறார். பழையதம் அடியார் செய்த பாவமும் பிழையும் தீர்ப்பர் (1) அடியாரடியார் தங்கள் பிறவி தீர்ப்பர் (4), வணங்குவார் இடர் தீர்ப்பர் (7), பரவுவார் இடர் தீர்ப்பர் (8,); இவற்றில் சிறப்பாகக்கருதத் தக்கது இரண்டாம் பாடல்;

உன்னி வானவர் ஓதிய சிந்தையில்
கன்னல் தேன்கட வூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை என்னுர் பெருமா னடிகளே,

இப்பாடல் கூறும் கருத்து அனைத்திலும் சிறப்புடையது. 'பெருமானடிகள் தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம் பின்னை என்னுர்' வாழ்க்கையில் துன்புற்று வேதனை அடைந்தோர்க்கு இதனினும் சிறப்பானது எது? பெருமானடிகள் துன்புற்றவனுக்கு அருள் நாளை வரும் என்னமாட்டார்; இன்றே செய்வார்; துன்புற்றவன் மட்டும் தொழுது அழுபவனுக இருத்தல் வேண்டும்.

இப்படியே சுந்தரர் தேவாரத்திலும், பெருமானடிகள் அருள் செய்யும் சிறப்பை இரண்டு பாடல்களில் மிகவும் போற்றிக் கூறுகிறுர். காலத்தில் பின்வந்த சுந்தரர் தமக்கு முன்வழிபட்ட சம்பந்தர், அப்பர் பாசுரங்களை நன்கு பயின்றிருக்கிறுர் என்று நாம் கருதவேண்டும். இவர் இங்குப் பாடியுள்ள பாடல்களில் இரண்டு இக்கருத்தைக் குறிப்பிடுகின்றன.

நறைசேர் மலர்ஐங் கணையானை
நயனத் தீயாற் பொடிசெய்த
இறையா ராவர் எல்லார்க்கும்
இல்லை யென்னு தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு
பயிலுந் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே,

அப்பர் சுவாமிகள் பின்னை என்னுர் என்பதை உணர்ந்து சுந்தரர் 'இல்லை என்னுதருள் செய்வார்'' என்று பாடியுள்ளார். இனி சுந்தரர் பதிகத்தின் கடைசிப் பாடல்;

மாட மல்கு கடவூரின்
மறையோர் ஏத்து மயானத்துப்
பீடை தீர அடியாருக்கு
அருளும் பெருமா னடிகள்சீர்

நாடி நாவ லாரூரன்
நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற்
பாவ மான பறையுமே.

இங்கு பீடைதீர அடியாருக்கருளும் பெருமானடிகள்' என்று கூறியது, சம்பந்தர் 'ஆசைதீரக் கொடுப்பார்' என்று கூறியதைத் தழுவியது என்பது வெளிப்படை. இப்பதிகம் அகத்தியர் தேவாரத்திரட்டின் பதிகங்களுள் ஒன்ருகும்,

இது காறும் நாம் காட்டியவற்ருல், தேவாரம் பாடிய மூவரும் கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகள், இல்லை என்னுது கொடுப்பார், பின்னை என்னுது கொடுப்பார், ஆசைதீரவும் பீடைதீரவும் அளிப்பார் என்று கூறுவதை எடுத்துக் காட்டினேம். மூவரும் ஒத்துச் சொல்வது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, சைவ அன்பர்கள் திருக்கடவூர் வீரட்டத்திற்குச் சென்று வழிபடுவது போல, திருக்கடவூர் மயானத்திலும் சென்று தொழுது அழுது வழிபட்டால், பெருமானடிகள் திருவருளுக்குப் பாத்திரமாவார்கள் என்பது உறுதி.

குறிப்பு:— இக்கடவூர் மயானத்தைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் சிலரே. அவர்களுள் விரல் விட்டு எண்ணத்தக்கவர் சிலர்தான் சைவர்களாயுள்ளனர். பிற குடும்பங்கள் எல்லாம் சிறித்தவ சமயத்துக்கு மாற்றப்பட்டுள்ளன என்பது மிகவும் வருந்தத்தக்க செய்தியாம். கடவூர் மயானத்துப் பெருமானடிகளைக் கண்டுவழிபட்டு அவனருளைப் பெற, அத்திருத்தலத்துச் சுற்றியுள்ள சைவமக்கள் மீண்டும் பிறசமயம் சென்றமக்களைப் பெருமானின் அருள் பெறுந்தொண்டர்களாக்க முனையவேண்டாவா? செலவுசெய்து கொண்டே போனால் முதல் என்னுகும்? நம் சமயநிலையும் இவ்வாறே. ஓர்ந்து சமயப்பணிகருதுமின் (துணையாசிரியர்.)

# பாண்டி நாட்டு நள்ளாறு?

பா. சந்திரசேகரன்.

சென்னி (சோழ) நாடு எல்லா நாடுகட்கும் சென்னி (தலை) நாடாக விளங்குகிறது என மருதவன புராணத்தில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரவர்கள் கூறுவார்கள். அச்சோழவளநாட்டில் பாடல் பெற்றதும் பாடல்பெறாதது மாக விளங்கிச் சைவம் பெருக்குகிற சிவத்தலங்கட்குப் பஞ்சமில்லை. மூர்த்தி தீர்த்தம் தலம் என்ற மூன்றானும் சிறப்புற விளங்குகிற சிவத்தலங்களுள் நள்ளாறு என்பதும் ஒன்று. சரித்திர புராணவரலாறுபடி மிகத்தொன்மை யானது. இத்திருப்பதி மூவர் முதலிகளால் பாடப் பட்டதோடன்றி கல்லாடர், கச்சியப்ப சிவாச்சாரியார், சேக் கிழார் போன்ற பெருமக்களாலும் குறிக்கப்பெற்றது.

ஆனல் இத்திருநள்ளாறு மதுரைக்கு அண்மையில் இருந்ததாகக் கூறி ஒருவர் எழுதினர். கட்டுரைகாரர் கொண்ட விளக்கங்களைத்தீர ஆய்வது நலம் எனக்கருதி ஆராய்வாம். 1. இரட்டைப் பதிகமாகிய 'திருநள்ளாறும் திருஆலவாயும்' என்பது அவை ஒன்றுக் கொன்று அணித் திருந்தது என்பதாகச் சான்று காட்டினர். அந்தக் கட்டுரைகாரர் கூட்டத்தவறியன பல. இரட்டைப் பதிகங் கள் ஆசிரியர் விருப்பப்படி அமைவன. இரட்டைப்பதிகம் இரண்டு அண்மையில் உள்ளனவான திருப்பதிகளைத்தான் குறிக்கவேண்டும் என்பது விதியன்று. ஒருசில இரட்டைப் பதிகங்கள் அண்மையில் உள்ள வூர்களைக் கொண்டன. ஆனல் எல்லாமும் அப்படியல்ல. ஞானசம்பந்தர் 'திருவீழி மிழலையும் திருப்புகலியும்' என நெடுந்தொலைவுள்ள இருதிரு வூர்களை இணைக்கின்றார். அவரே கூடற் சதுக்கம் எனப் பெயரிட்டுத் திருக்கயிலாயத்தையும் திருவானைக்காவையும், திருமயேந்திரத்தையும் திரு ஆரூரையும் சேர்த்துப் பாடி யதைக் கணடு கொள்க. சுந்தரரோ நடு நாட்டு இடை யாற்றையுர், சோணாட்டு இடைமருதையும் சேர்த்தேபாடி யிருத்தல் வியப்பை அளிக்கிறது. நக்கீர தேவநாயனாரோ

கயிலை பாதி காளத்திபாதி அந்தாதி பாடி வடகோடியையும் தென்கோடியையும் பாடுகிறார். ஞானசம்பந்தரும் திருநள்ளாற்றையும் திரு ஆலவாயையும் பாடியதில் வியப்பென்ன இருக்கிறது? * இக்கருத்தையே சேக்கிழார் தெளிவாக வலியுறுத்துகிறார். எனவே கட்டுரைகாரரின ஐயத்திற்கு ஆதாரம் காட்டினோம்.

2. கல்லாடர் மதுரையைச் சுற்றியிருக்கிற நகரங்களைக் கூறும் போது திருநள்ளாற்றையும் கூறுகிறார். கல்லாடர் கூறிய கூற்றை நாம் ஆராயத் தேவையில்லை. அவர் மதுரையைச் சுற்றியிருந்த சில வூர்களையும், மதுரையோடு நெருங்கிய வரலாற்றுத் தொடர்புடைய சில வூர்களையும், அக்கல்லாடத்தில் கூறுகிறார். அவ்வாறு கூறும்போது மேற்கூறிய இருவகை வூர்களும் சூழ்கொள மதுரை இருந்ததாகப் பொதுப்படையில் கூறினாரே யன்றி யாண்டும் நள்ளாறு மதுரைக்கு அண்மையில் இருந்ததாகக் கூறினாரில்லை. முக்காலத்தும் நள்ளாறு மதுரைக்கு அண்மையில் இல்லை என்பது தெரிந்தும், அவர் கூறினமைக்குக் காரணம் இது எனக: அனல் வாதத்தின் போது அனலில் போடுதற்குச் சம்பந்தர் இறைவன் மீது பாடிய பதிக ஏடுகளில் கயிறுசாத்திப் பார்க்க திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. எரியிலிட்ட அப்பதிகத்தை எரியாது காத்தருளிய சிவபெருமான் மீது ஞானசம்பந்தர் சோழநாட்டிற்குத் திரும்பியபிறகு நள்ளாற்றிலிருந்து பாடிப்பரவுகிறார். இத்தகைய வரலாறு மதுரையையும் நள்ளாறையும் எத்துணைத் தொடர்பு படுத்துகிறது. திருஆலவாயைச் சிந்திக்குந்தொறும் திருநள்ளாற்றையும் சேர்த்தே எல்லோரும் சிந்தித்தனராம். கல்லாடரும் அவ்வழக்குப் பற்றியே நள்ளாறும் மதுரையைச் சூழ்கொள இருந்ததாகக் கூறினர். ஆனல் யாண்டும் நள்ளாறு மதுரைக் கணித்தே யிருந்ததாகக் கூறினாரல்லர்.

3. அதான்று நான் மாடக்கூடலுக்கு விளக்கங்கண்ட நச்சினார்க்கினியர் கலித் தொகையிலும் மதுரைக் காஞ்சி

* பெரியபுராணம்: ஞான: 903.

யிலும் உரை காணும் போது திருநள்ளாற்றைக் குறிக்கிறார். உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் தம்வுரையில் புதுமை இருக்கவேண்டும் என்பதற்காக கன்னி, மரியமால், காளி, ஈசன் என்று வழங்கிய உரைக்கு மேலும் திருமுடங் கல், திருநடுவூர், திருநள்ளாறு, திருஆலவாய் என்றும் கூறுப எனப்புதியன கூறினர். இதற்கு அவர் ஆதாரமாகக் கொண்டது கல்லாடமென அறிக. கல்லாடர் கருத்தை எப்படிப் புரிந்து கொண்டாரோ அறிகிலேம்! ஏனென்றால் சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்துக்கு உரைகண்ட உரைகாரர்யாரும் குறிக்காதே சென்றனர். நம்பியும் நான் மேகக் கூடல் நான்மாடக் கூடலானதைக் கூறுகிறாரே யொழிய யாண்டும் நள்ளாறெனும் பெயரைச் சுட்டினதாக யாம் அறிகிலேம். அரும்பெறற் புலவராம் பரஞ்சோதி முனிவரோ நான்மாடக் கூடலுக்கு மேகங்களைத் தொடர்பு படுத்திப் புராணத்தை இயற்றுகின்றார். அதுவல்லாமலும நம்பி திருநடுவூர் திருமுடங்கல் திருஆலவாய் என்பன ஒரே இடத்தைக் குறிக்கும் வெவ்வேறு காரணப் பெயர்களாகக் கொண்டு விளக்கம் காணுதலாலும் அங்கும் திருநள்ளா றெனும் பெயரைச் சுட்டாதே சென்றதனாலும் நச்சினார்க் கினியர் உரைக்கோள் பொருந்தா தென்க.

4. மதுரையைப் பற்றி வெவ்வேறு காலத்தில் எழுந்த எந்நூலும் திருநள்ளாறென இருந்ததாகக் குறிப்பே காட்டாததாலும், இன்றும் மதுரைக்கு அண்மையில் அப்படி ஓர் ஊர் இன்மையாலும், நளன் சிவனைப் பூசித்துத் துயர் நீத்த வரலாற்றைச் சம்பந்தமூர்த்திகள் குறிப்பிடுவதனாலும், அவ்வரலாறு இன்றும் சோழநாட்டுத் திருநள்ளாற்றில் போற்றப் பெறுதலினாலும் திருநள்ளாறென்பது சோழ நாட்டினதே என உறுதிசெய்க. மதுரைக்கு அண்மையில் இல்லை என மறுக்க.

5. அதான்று திருநள்ளாறெனும் ஊர்தென் பாளி என்னும் ஆற்றின்மேல் இருந்ததாக ஆசிரியர் ஆசங்கிப்பது

எற்றுக்கோ? × பஃறுளி யாற்றைப் பாளியாறு எனத்திரித் துணர்ந்தார் போலும். அப்படியே கொண்டாலும் அஃது இடைச்சங்க காலத்திய — அழிந்துபோன — நிகழ்ச்சியாகும் என்க* மேலும் கலவை என்ற சொல்லுக்கு நச்சினார்க் கினியாரோ நாலடியாரோ மீன்எனப் பொருள் கொள்ளா திருக்க, கட்டுரைகாரர் அகராதியில் கண்ட பலபொருள் களில் ஒருபொருளையே வன்மையாகப் பிடித்துக் கொண் டிருப்பது எற்றுக்கோ? வலிந்து பொருள் கூறுவதாகக் கூறி அமைக.

மேலும் கட்டுரைகாரர் சம்பந்தமூர்த்திகளின் பதிகப் பாடங் களை நோக்காது கூறினர்,

"அடர்த்தவர் தமக்கு இடமது என்பர் அளிபாட
நடத்த கலவைத்திரள்கள் வைகிய நள்ளாறே"

என்பதில் இடமது என்பர் அளிபாட என்பதை இடம தென்பாளி பாட எனக்கொண்டது பற்றி வியப்பதா, நயப் பதா என அறியேம். அளிஎன்பது வண்டு, நடத்த என்பது பெயரெச்சம் என்ற பொருட்டொடர்பை நினைந்து மற்றதை மறக்க. சம்பந்த மூர்த்திகளின் பதிகத்தை ஒப்பிட்டு உண் மையை ஓர்க.

6. "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங் கும் பதிகமே பச்சைப் பதிகமென சேக்கிழாருக்கு முன்னி ருந்தே வழங்குகிறது. ஆனல் கட்டுரைகாரரோ "தளிரிள வளரொளி" என்னும் பதிகமே பச்சைப் பதிகமென்பார். அப்படியானல் எப்போதோ செய்ய வேண்டிய அனல் வாதத்திற்கு முன்கூட்டியே "எரியினில் இடில் இவை

---

× பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள (சிலப்பு)

* பீர்க்கங்காயோடு கூட்டிச்சமைத்த நண்டின்கறி (கலவை)

பழுதிலை மெய்ம்மையே" என்று சம்பந்தர் எதிர்பார்த்துப் பதிகம் செய்தார் எனப்புதிய வரலாறு தோன்றுகிறது. மேலும் அனல்வாதத்திற்கு ஆலவாயிலிருந்த ஆளுடைய பிள்ளையார் நள்ளாறரைச் சிந்தித்ததேனோ? என்றகேள் விக்குச் சேக்கிழார் போன்று தக்கவிடையிறுக்க முடியுமா?

எனவே இக்காரணங்களைக் கொண்டு சிந்தித்தால் மூக் காலத்தும் திருநள்ளாறு திருஆலவாய்க்கு அண்மையில் யில்லை யென்பது தெரியவரும். மற்றைய காரணங்கள் உண்மைக்கும் அறிவுக்கும் ஏலாது. மற்ற பல மறுப்புரை களும் இருந்தனவேனும் இற்றைக்கு இதுபோது மெனவும் விரிவஞ்சியும் விடுத்தோம்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

## சென்னை சைவ சித்தாந்த மகா சமாச 63-ஆம் ஆண்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அவர்கள் ஆற்றிய

## மாநாட்டுத் திறப்புரை

((27—12—68)

[சென்ற இதழின் தொடர்ச்சி]

மேலும் சமய சமரசம் என்ற பெயரால் கலப்படமும் செய்யப்பெறுகிறது. சமரசம் வேறு; சமய ஒருமைப்பாடு காண முயலுதல் வேறு; சமயக் கலப்படம் வேறு; சமய ஒருமைப்பாடு காண வேண்டுவது மிகவும் அவசியமானதொன்று. அது சமய அடிப்படை ஒழுக்கமும்கூட. இதனைத் தாயுமானுர், 'இதுவாகும் அதுவாக வென்னும் பிணக்கதின்றி' ...என்று குறிப்பிட்டுள்ளார். அஃதாவது பிணக்குகளைக் கொள்

ளாமல் சமயங்களின் விழுமிய நோக்க அளவில் ஒருமைத் தன்மையைக் காணுதல். சமய சமரசம் என்பது தத்தம் சமய நெறியில் ஆழ்ந்த பற்றும், தோய்ந்த அனுபவமும் கொள்ளுதல். அதே நேரத்துப் பிற சமயங்களிடத்தில் வெறுப்புணர்வின்றி அன்புணர்வோடு ஈடுபாடுகளைக் காட்டுதல். சமயக் கலப்படம் என்பது எந்த ஒரு தத்து வத்திலும் ஆழமான ஈடுபாட்டைத் தோற்றுவிக்காமலும், 'இதையும் கும்பிடலாம் அதையும் கும்பிடலாம்' என்று இடத்திற்கேற்றாற்போலும், உலகியல் ஊதியத்தையும் இழப்புகளையும் காட்டி உணர்ச்சி வசப்படுத்தியும் சமய வழிபாடுகளை விளம்பர வணிகப் பொருள்களாக்கியும் கெடுப்பதாகும். இந்த மனப்போக்கு எஞ்ஞான்றும் மன்னிக்க முடியாதது.

தொன்றுதொட்டு ஒழுகிவந்த தமக்குரிய தூய சிவ நெறியில் இன்று ஒழுக வேண்டிய தமிழ்ப் பெருங்குடி மக்கள், இந்த அவல நிலைக்கு ஆளாதல் கூடாது. படிப்படி வளர்ச்சியும் தேர்ச்சியும் ஆதல் உலகத்து இயற்கை. 'அறுவகைச் சமயத்து அவரவரைத் தேற்றுந்தகையன, தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகையன' என்னும் அப்பரடிகளின் அருள் மொழியை எண்ணுக. தூய சிவ நெறியே இணையற்ற நெறி; ஈடும் எடுப்பும் இல்லாத எழில் நெறி; அந்நெறியினைச் சார்தலே உய்தற் குரிய சிறப்பு வழி. அதனாலன்றோ 'சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது' என்றும் 'மேன்மைகொள் சைவ நீதி' என்றும், 'அரசாங்கத்து அமர்ந்தது வைதீக சைவம்' என்றும் அருளாளர்கள் போற்றிப் புகழ்ந்து கூறியுள்ளனர். ஆதலால் சிவநெறியின் நற்சார்பே சிறந்த சார்பெனக் கருதி ஒழுகுவோமாக.

சிவன் எம்பிரான் நம் தந்தை; தாய்; உற்ற தோழன்; எந்நாளும் ஆளும் தனித்துணை; கரும்பிற் கட்டிபோல் இனிப்பான்; சித்தம் தெளிவித்துச் சிவமாக்கி ஆட்கொள் வான். அவனை 'நீலமணி மிடற்றொருவன்' என்று புறநானூறு போற்றுகிறது. 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்று ஐங்குறுநூறு பாராட்டுகிறது. 'மன்னிய

நான்மீன் மதிகனலி என்றிவற்றை முன்னம்படைத்த முதல்வனைப் பின்னரும் ஆர்திரையான் ஆர்திரையான் என்றே அயருமால் ஊர்திரை வேலி உலகு'' என்று முத்தொள்ளாயிரம் முழக்குகிறது. 'பிறவாயாக்கைப் பெரியோன் கோவில்' என்பது சிலப்பதிகாரத்தின் சீரிய செஞ்சொல். 'தேவர்கோ அறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தளிக்கும் மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன்' என்பது திருவாசகம். 'சிவத்தோ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்பது திருமந் திரம். இறைவன் யாண்டும் எளிவந்தருளும் கருணை யினன். சிந்தை மயக்கறுத்துச் சிவமாக்கி என்னை ஆட் கொள்ளும் வல்லாளன்.

## வழிபாடு

வழிபாடு என்பது உயிர் குறைகள் நீங்கி நிறைநலம் பெற்று ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த அன்பினில் விளைந்த இன்ப ஆரமுதை நுகர்ந்து இன்புறு தலையே நோக்கமாகக் கொண்டது. ஓர் எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு நம்மை அழைத்துச் சென்று சேர்க்கும் பாதையினை உலகியலில் வழி என்றே கூறுகிறோம். அது போலக் கருக்குழி எல்லையிலிருந்து ஆரா இன்ப அமுத எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு. இருளடர்ந்த சூழலிலிருந்து மீட்டி நம்மை ஒளியும் தெருளும் நிறைந்த எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு. அறியாமை யிலிருந்து, மேலாம் ஞான எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு. பயணம் செய்பவர்கள் பாதத்தைப் பாதையில் ஊன்றி, சேரவேண்டிய எல்லையை நோக்கி அடி அடியாக முன்னேற வேண்டும். கடந்த தூரம் பெருகி, கடக்க வேண்டிய தூரம் குறுகிக் கடைசியில் எல்லையினை அடைதல் களிப்பூட்டும். அதுபோல அறியாமை தேய்ந்து அல்லல் நீங்கி அழியா இன்பம் பெருக நம் முடைய பேரின்பவைப்பாக இருக்கிற இறைவனின் இணையடிகளைச் சார்ந்து இன்புறுவது வழிபாடு. வழிபாடு இறைவனை நினைந்து செய்யக்கூடியதாயினும் இறை வனுக்காக அன்று. சோற்றினைக் கருதி, பேணி வேக

வைத்தாலும் சோறு சோருக இருப்பதற்கன்று. அல்லது சோறு பெருமையுற வேண்டுமென்பதற்காகவும் அன்று. சோறு ஒருவனின் வயிற்றுப் பசிக்கேயாம். அதுபோல உயிர் இறைவனை நினைந்து வாழ்த்துதல் இறைவனின் நிறைநலன்களைப் பெற்று அவனுடனுய்க்கூடி இன்புறு தலுக்கேயாம். இரண்டும் இரண்டும் நாலு என்று எப் படிக் கணக்கில் விடை தப்பாமல் கிடைக்குமோ, அது போலவே வழிபாட்டிலும் பயன் தப்பாமல் கிடைக்கும். இஃது உண்மை.

'ஒன்றியிருந்து நினைந்து பித்தருக்குப் பத்தராகி அரும்பொடு மலர் கொண்டாங்கே, ஆர்வத்தை உள்ளே வைத்து விரும்பிநல் தூப தீபம் விதியினுல் இடவல்லார்க் குக் கரும்பினுள் கட்டிபோல்வார்' என்று அப்பரடிகள் அறுதியிட்டுக் கூறுகிருர். பல இடங்களில் திருஞான சம்பந்தர் 'யாதும் ஐயுறவு இல்லை' யென்றும் 'ஆணை நமதே' என்றும் உறுதியாக அருளியுள்ளார்கள். 'வேண்டமுழுதம் தருவோய் நீ' என்ருர் மாணிக்கவாச கரும். ஆங்கிலக் கவிஞன் டென்னிஸனும் "உலகோர் கனவிலும் பெறமுடியாத மிகு நலங்கள் பலவற்றைப் பிரார்த்தனை கொண்டுவந்து சேர்க்கும்" என்ருன். ஆனுல் இன்றோ வழிபாட்டுத் துறையில் ஒன்றிய உணர்வு டன் ஈடுபடுவோர் எண்ணிக்கை அருகிக் கொண்டிருக் கிறது இறைவனிடம் தன்னை ஒப்படைத்து நம்பி வழி படுவோர் எண்ணிக்கை அருகி வருகிறது அதனினும் வேடிக்கை 'எல்லாமாய் அல்லதுமாய், ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய், உடன் தோன்றினராய், விளங்கி இல்லங்கள் தோறும் எழுந்தருளிப் பொற்பாதம் தந்தரு ளும் சேவகனை' வாழ்த்தாது சனி பகவானைச் சுற்றும் பெரும் பேதைமை வளர்ந்திருக்கிறது. 'கொள்ளேன் புரந் தரன் மாலயன் வாழ்வு, குடிகெடினும்' என்ற மாணிக்க வாசகரின் நெஞ்சுரமெங்கே? 'சென்று நாம் சிறு தெய் வங்கள் பால் சேர்வோமல்லோம்' என்று ஒழுகிய அப்ப ரடிகளின் சைவ சீலமெங்கே? இன்றோ நம்முடைய கடை வீதியில் புதிய தெய்வங்கள்; புதுப்புது அவதார புருடர் கள்; நாளுக்கொரு கடவுள்; நலிவுக்கொரு சாமி, வெந்த

தைத் தின்ன ஒரு சாமி; வினைவந்தால் சாக ஒரு சாமி. ஐயகோ, இரங்கத் தக்க நிலை! ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பி சைவ நன்னெறியின் சீலம் உய்யத் திருவவதாரம் செய்த நால்வர் பெருமக்களின் திருவருள் நம்முடைய சிந்தையினைத் திருத்தி வழி நடத்துவதாக வழிபாடு—மெய்யடியார்கள் சென்ற வழியிற் படுதல்.

## திருக்கோயில்

தமிழினத்தின் சமய வாழ்வியலில் திருக்கோயில் மிகவும் சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. தமிழினம் வரலாற்று அறிவிற்கெட்டிய மூற்காலம் தொட்டே இறைவனைக் கைப்பொருளாகக் கண்ணுக்கினிய பொருளாக ஏற்றுத் திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வந்திருக்கிறது. எந்த ஒரு சிந்தனைத் தத்துவத்துக்கும் சின்னமும் சடங்கும் இன்றியமையாதன. ஒரு கருத்தின் பரிணாம வளர்ச்சியே சின்னத்திலும் சடங்கிலும் கொண்டுபோய் விடுகிறது. நம்முடைய சமயச் சார்பிலுள்ள சின்னங்களை—சடங்குகளைக் கண்டிக்கின்ற பிற சமயங்களும் கூட சின்னங்கள் சடங்குகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவை அல்ல என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏன்? பகுத்தறிவுவாதிகளுங்கூட இதற்கு விலக்கல்லர். தம்முடைய சிந்தனையைக் கருத்தைப் புறத்தே வெளிப்படுத்த மற்றவர்க்கு உணர்த்த தம்முடைய உணர்வை நிலைநிறுத்திக் கொள்ளச் சின்னங்களும் சடங்குகளும் பெரிதும் துணை செய்யும் என்றே கொள்கின்றனர். இஃது ஓரளவு வளர்ந்தவர்களுககு. வளரவேண்டியவர்களுக்குச் சின்னங்கள் சடங்குகளின் வாயிலாகவே பெறவேண்டிய உணர்வைப் பெறமுடியும். திருக்கோயில் வழிபாட்டில் நம்முடைய சமுதாயம் மிகவும் சிறப்புற ஓங்கி வளர்ந்திருந்தது. சங்க காலத்திலேயே நகரமெனக் கருதத்தக்க பெருங்கோயில் இருந்ததாகப் புறநானூறு பேசுகிறது. தமிழகத்தை ஆண்ட பேரரசர்கள் தாம் வாழ்ந்த மனைகளைக்கூட வளமனைகளாகப் பெரும்பாலும் எடுக்கவில்லை. குடிமக்களோடு குடிமக்களாக ஒன்றித்து

வாழ்ந்த அவர்களுடைய எளிமையை என்னென்று கூறிப் பாராட்டுவது? ஆயினும் இந்த உலகத்துக்கு அம்மையப்பராக விளங்கும் இறைவனுக்கு விண்ணளந்து காட்டி வெவ்வினை நீக்கி வேண்டியவரம் கொடுக்கும் கோயில்கள் நிறைய எடுத்தார்கள் திருக்கோயில் வழிபாடு நமக்கு இன்றியமையாதது. நமது உணர்வு பரபரப்பானது; சென்ற சென்ற இடங்களில் செல்லும் இயல்புடையது. இதனை இழுத்துப் பிடித்து நிறுத்தி உணர்வு கலந்த வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்குத் திருக்கோயிலே ஏற்ற இடம். உயிர்கள் உந்தி உயர்வதற்கு உறுதுணையாக இருப்பன ஐம்புலன்களைப்பற்றி இன்புறும் ஐம்பொறிகளேயாம். இவற்றில் ஒன்று வழிபாட்டில் ஈடுபடடுப் பிறிதொன்று ஈடுபடாது போனாலும் பலனல்லை. இந்த ஒருமைப் பாட்டினை உருவாக்கும் ஆற்றலும் சூழலும் உடையது திருக்கோயில். திருக்கோயில் வழிபாடு நமது வழிவழி மரபு. அதனாலன்றோ அப்பரடிகள் திருக்கோயில் சூழ்தலை உடன்படுமாறு வற்புறுத்த "ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்..." என்று திருக்கோயில் சூழாதாரை உறவுகொள்ள மறுக்கிறார்,

இங்ஙனம் வழிவழிச் சிறந்துவரும் திருக்கோயில் வழிபாட்டில் வரவர வணிகப் போக்கு மேம்பட்டு வருகிறது. ஆங்கும் வேண்டத்தக்க அமைதிக்குப் பதில் ஆரவாரம் தலைகாட்டுகிறது. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று அரற்றக்கூடிய திருக்கோயிலில் இன்றைய சூழல் என்ன? ஆங்குக் காதலும் கனிவும் இன்று அரும்புகிறதா? எந்தத் திருமுறைப் பாடல்களை இறைவன் கேட்க விரும்பிக் காமுற்றானோ, அந்தத் தனித் தமிழ்ப் பாடல்கள் ஆங்கு ஓதப்பெறுகின்றனவா? இறைவனே 'அருச்சனை பாட்டேயாகும்' என்று தெளிவுற எடுத்துக் காட்டிய பிறகும் இன்று திருக்கோயில்களில் நடைபெறுவது திருமுறை அருச்சனையா? அப்பரடிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்தும் அருச்சனைப் பதிகம் எனப்படும். அவை என்ன ஆயிற்று? அதுபோல் திருவாதவூரடிகள் மொழிந்த போற்றித் திருவகவலும் காருணியத்து இரங்கலும் என்ன ஆயிற்று?

போற்றி மந்திரம் ஓதிப் பூத்தூவுவார்க்கன்றி ஏனை யார்க்கு இறைவன் அருளான் என்னும் உண்மையினை வருமாறு உணர்த்துகின்றன திருமுறைகள் :

"செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்தவூன்றிய விரலான் போற்றி என்பார்க்கல்ல தருளான்
கொழுங்கனி சுமந்துந்திக் குளிர்புனல் நிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள் தம்அருளே"
2.90.8

"ஆக்கை யாற்பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னாதஇவ்
ஆக்கை யாற்பயனென்"—4. 9. 8.

"தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
இருளும் நீங்கவும் எழுதுசொல் மறை அளிப்பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றிஎன்பாருக்
கருளும் அந்தணர் திருஅரத் துறையைவந் தணைந்தார்
—12. சம்பந்தர், 224.

தேவரெலாம் தொழும் தேவன், நம் தலைவன். 'தமிழோசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினான். மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் சொல்லும் தமிழ் கேட்டான்; தண்ணளி சுரந்தான். இன்றோ இறைவனுக்கும் நமக்கும் இசைவை உருவாக்கச் சக்தியற்ற அருச்சனை முறைகளே நடைமுறையிலிருக்கின்றன. சிவ சிந்தனையில் நாம் வளரவேண்டும் என்று விரும்பும் அனைவரும் திருக்கோயில்கள் அனைத்திலும் திருமுறை அருச்சனையே நடைபெறச் செய்யவேண்டும். இதற்குக் கிளர்ச்சியே செய்தாலும் தவறில்லை. ஏனெனில் சிவபெருமானே செந்தமிழ்ப் பாட்டுக் கேட்கக் கிளர்ச்சி செய்திருக்கிறான். அமைந்திருந்து கேட்டு அளவிலா இன்புற்றுப் பூட்டிய கதவைத் திறந்துகொண்டு வெளிவந்திருக்கிறான். இதனை திருமறைக்காடடுத் திருக்கோயில் வரலாறு

பேசும். பண் சுமந்த பாடற் பரிசுபெறக் கலி மதுரையில் மண் சுமந்தான். சுந்தரரின் சுந்தரத் தமிழ்ப் பாட்டுக் கேட்டு மகிழ்ந்ததில் சேரமான் பூசனைக்குச் செல்லும் செயலையும் மறந்தான் பெண்ணும் பொன்னும் பெருஞ் சோறுஞ் சேர்த்துக்கொடுத்துச் செந்தமிழ் கேட்டான். அப்பரடிகளின் அமுதத் தமிழை ஆர்ந்து அநுபவிக்க அவர் தம் உரிமையாகிய வீடும் அப்பொழுதே கொடுக்க வேண்டியும் காலம் தாழ்த்தினான். நம் இறைவன் ஆடு கின்ற அரசு. தெற்கு நோக்கியே ஆடுகிறான். தென் திசை நோக்கியே நகர்ந்து நகர்ந்து ஐம்பெரும் மன்றத் திருத்தலம் அமைத்துக்கொண்டு ஆடுகிறான். தெற்கில் என்ன புதுமை? வடவரையிலன்றோ கயிலாயம் இருக் கிறது! வடமலையில் கயிலை இருக்கலாம். ஆனால் அங்குச் சந்தனப் பொதியத் தென்றலில்லை. அத் தென்றலோடு அளாவும் தேமதுரத் தமிழும் இல்லை. தென்றலையும் தேமதுரத் தமிழையும் ஆர்ந்து அனுபவிக்கவே அண்ணல் தென்திசையை நோக்கி ஆடுகிறான். இது வடபுலம் வெற்றிகண்ட நற்றமிழ்க் குமரகுருபரரின் கருத்து. ஆத லால் இறைவனை மகிழ்வித்து நாம் மகிழத் திருமுறை அருச்சனையே துணை.

நம்முடைய சமயம் சாதிப்பிரிவினைகளுக்கு அப்பாற் பட்டது. ஒருகுல நெறியே, உயர்சைவ நெறி. ஆனால் இன்னமும் நம்முடைய திருக்கோயில்களில் இடையே புகுந்த சாதிமுறை அமைப்பைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறோம். இஃது ஓர் அவலம் என்பதை இன்னமும் நாம் உணராதது ஏனென்றே விளங்கிக்கொள்ள முடிய வில்லை. நம்முடைய ஞானாசிரியர்கள் 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?' என்று இடித்துக் கேட்டபிறகும் "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேன்" என்று இரங்கத்தக்க நிலையை எடுத்துக்காட் டிய பிறகும் நாம் சாதி உணர்வுகளிலிருந்து விடுபட்டோ மில்லை. 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' என்ற அப்பரடிகளின் பாட்

டைப்பாடி மகிழ்ந்தோமேயன்றி அப்பாட்டுணர்த்தும் பொருளை உணர்ந்தோமில்லை; அப்பரடிகளும், அப்பூதி யடிகளும் கொண்டுள்ள அன்பின் உறவை சேக்கிழாரின் செஞ்சொற் காவியத்தில் படித்து மகிழ்ந்தோமேயன்றி சமுதாய அமைப்பில் அத்தகைய நல்லிணக்க உறவுகள உருவாகவில்லை. அன்பிற்கோர் திருவுருவமாய் விளங்கிய கண்ணப்பர் வரலாறு காவியத்தில் கண்டோமேயன்றி வாழ்க்கையில் கண்டோமில்லை. கண்ணப்பர் வரலாறு நம்முடைய சமுதாய சமய வரலாற்றில் ஒரு மையம். ஒரு வரலாற்றுத் திருப்புமுனை; கண்ணப்பர் சிவகோசரியார் பாத்திரங்கள் மூலம் இறைவன் நமக்கு உணர்த்தியது அன்புகலந்த வழிபாடேயாகும். இறைவன் அடியார்களின் தூய அன்பைத துய்த்து மகிழ்கின்றான். அடியார்களின் தூய அன்பை ஆரத்துய்த்து அனுபவிப்பதில்தான் அவனுக்கு ஏக்கம் அதிகம் நாம் இறைவனோடு கொள்ளும் காதல் உறவு ஒரு போதும் கைக்கிளை அல்ல. நாம் அவனைக் காதலித்துத் தேடும் ஆர்வத்தினும் பன்னூறு மடங்கு அவன் நம்மைக் காதலித்துத் தேடி வருகிறான். நாம் அவனது திருவருளுக்கு ஏங்கிக் கிடப்பதுபோலவே அவனும் நமது அன்புக்கு ஏங்கிக்கிடக்கிறான். அதுதானே இருதலையும் ஒத்த எழிற் பெருங் காதல்; அதுதானே தாய் அன்பு. திருவள்ளுவர் அகனைந்திணை வாழ்க்கையில் எச்சில் அமுதமாவதை எடுத்துக் காட்டினார். குமர குருபர அடிகள் ஞான வாழ்க்கையில் எச்சில அமுதமாவ தைப் பண்டார மும்மணிக்கோவையில் எடுத்துக்காட் டினார். இறைவனோடு கொண்ட இன்ப அன்பு உறவில் கண்ணப்பரின் எச்சில் இறைவனுக்கு அமுதமாவதைச் சேக்கிழார் வடித்துக் காட்டினார். விதிமுறைகள் வளர்ச் சிக்கு இன்றியமையாதன. பயிருக்கு வேலி போல்வன. ஆனால் விதிமுறைகளையே சமயமெனக் கருதி மாழ்கி விடுதல் கூடாது நம்மை முறுகிய அன்பு நெறியில் வளர்க்கவே விதிமுறைகள் துணை செய்யவேண்டும். மாறாக ஆணவத்தடிப்பையும் சாதிப்பிணக்கையும் பகையையும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான இழிவு மனப் பான்மையையும் உயர்வு மனப்பான்மையையும் விதிமுறை கள் என்றபேரால் அனுமதிப்பது பெரும் குற்றமாகும்.

சாதி சடங்கு வழிபாட்டின் சின்னமாகச் சிவகோசரியாரை யும் ஆரா அன்பு வழிபாட்டின் சின்னமாகக் கண்ணப்பரை யும் காட்டிச் சிவகோசரியார் வழிபாட்டிலும் கண்ணப்பர் வழிபாடு அறிவாலும் அன்பாலும் தனக்கு மிகவும் உகந்தது என்று இறைவனே நன்கு எடுத்துக்காட்டி உணர்த்திய பிறகும் கூட நம்முடைய கோயில்களில் அன்பு வழிபாட்டுக்குரிய சிறந்த சூழலை உருவாக்கினோ மில்லை. இத்தகு வரலாறு நிகழாத — அப்பரடிகள் திருவவதாரம் செய்யாத வடபுலத்துக் காசியில் கூட பலரும் இறைவனைத் தொட்டுத் தாமே பூம்புனலும் வார்த் தும் தூவியும் வழிபாடு செய்யும் உரிமை இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டிலோ 'மோகமாய் ஓடிச்சென் ஞர், உச்சிமோந்தார்' என்ற கண்ணப்பர் வரலாற்றைக் கனியக் கனியப் பேசுகின்றோம். அங்ஙனம் பேசும் நம் நாட்டில் உள்ள திருக்கோயிலில் இறைவனுக்கு நேரடி யாகப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்யும் உரிமை நமக்கு இல்லை. நம்முடைய திருமுறைகள் எல்லோரும் இறைவனுக்குப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்தலை எடுத்துக் காட்டுகின்றன. பக்கம் (21, 22) திருவையாற்றுத் திருப்பதிகத்தில் அப்பரடிகள் 'போதொடு நீர் சுமந்து போவார் அவர் பின் யான் புகுவேன்' என்று அருளிச் செய்துள்ளமையையும், 'சலம்பூவொடு தூபம் மறந்தறி யேன்' என்றருளிச் செய்தமையையும் ஓர்க. இதனால் நம் முடைய திருக்கோயில்களில் உள்ள சிவாச்சாரியார்களு டைய உரிமையையும் தகுதியையும் மறுக்கின்றோமில்லை. மறுக்கவும் இயலாது. இறைவனே வழிபாடு செய்யும் முறையை உணர்த்திக் காட்ட ஐயாறதனில் சைவனாக வந்தார் என்று திருவாசகம் பேசுகிறது. இன்றும் திருவை யாற்றில் தன்னைத்தானே பூசித்தல் என்ற திருவிழா நடந்து வருகிறது. ஆதலால் சிவாச்சாரியர்கள் நம் முடைய சமயத் திருக்கோயில் வழிபாட்டு முறைக்கு இன்றியமையாதவர்கள். நாமெல்லாம் திருக்கோயிலுக்குச் சென்று பூவும் நீருமிட்டு வழிபட்டாலும் ஒவ்வொரு போதே செய்ய இயலும். அவர்கள் முப்போதும் திரு மேனி தீண்டி திருவருட் காப்பைப் பேணுபவர்கள். வரு கிறவர்களுக்கும் வழிபாட்டுணர்வைத் தூண்டிச் செய்து

காட்டிச் செய்யச் செய்பவர்கள். இதனால் மரபும் காப்பாற்றப்படும். வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் அனைவரும் நினைந்து நினைந்து நனைந்து நனைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபாட்டில் ஈடுபடவும் முடியும். ஆவியோடாக்கை புரை புரை கனிய என்புத் துளை தொறும் திருவருளின்பம் பாய வழிபாட்டின்பம் பெறமுடியும். இந்த மாற்றம் இன்றைய உடனடியான தேவை.

திருக்கோவில்களில் மெய்யடியார்கள் சென்று பூவும் நீருங்கொண்டு வழிபாடு செய்யுமாறு திருமுறை சித்தாந்த நூல்களுக்கியையத் தொன்மையில் நம் நாட்டில் நிகழ்ந்த பெரியபுராண இலக்கியச் சான்றுகள் பல. அவற்றுள் சில வருமாறு: கண்ணப்பர் சாக்கியர், திருநீலநக்கர், திருமுருகர் முதலியோர். இவற்றை வரும் வெண்பாவில் நினைவு கூரத் தருகின்றோம்.

நன்னெறிக்கிங் காசான்நூல் நால்வரவர் எண்முறையும்
துன்னுதுணை நான்கேனை தொல்சிவன்றாள்—
மன்னுவிக்கும்
சீலமுதல் நாற்படியும் போற்றி மறை பூத்தூவல்
சால்பெழுத்தைந் தோதல் வழிபாடு
(எண்முறை—எட்டுத்திருமுறை)
கோவில்வழி பாட்டில் குறைவில்சமு தாயத்தார்
யாவர்க்கும் பூநீர் எழிற்கையால்— தூவிஐந்தும்
ஓதுரிமை நாட்டினர்நம் கண்ணப்பர் சாக்கியனார்.
ஓதுநக்கர்பூ முருகர் ஓர்.

திருக்கோயில் வழிபாட்டில் எளிய சடங்குகள் இடம் பெறவேண்டும் காலமும் பொருளும் மிச்சமாகவேண்டும். கால விரிவும், பொருள் விரிவும் மட்டுமே கடவுள் விரும்புவன அல்ல. 'சட்டோ, நினைக்க மனத்தமுதாம்' என்றார் மாணிக்கவாசகப் பெருமான். திருமுறைகள் காட்டும் வழிபாட்டு நெறிமுறைகள் திருக்கோயில்களில் மிகுதியும் இடம்பெறவேண்டும் நமது வழிபாட்டு முறையில் இறைவனுக்குப் பூவும் நீரும் மிகவும் உரியன. தூபமும் தீபமும்

உரியன; இவற்றோடு நெஞ்சை நெகிழச் செய்யும் பண்ணிசையும் தேவை. இவை தம்மொடு இன்றியமையாது தேவைப்படுவது நெஞ்சம் ஆகும். (பலர் நெஞ்சினைத் தவிர மற்றுத் தேங்காய், பழம் ஏன்? முடியே கூடத் தருகிறார்கள் ஐயோ, பாவம்) இவை கொண்டு நிகழ்த்துவதே உண்மையான வழிபாடு. மூவர் தமிழில் மடைப்பள்ளியைக் காணோம். ஆங்கே பிரசாத மகிமையையும் காணோம். இன்றோ நம்முடைய கோயில்களின் பெரும் நிதிகளை மடைப்பள்ளிகளே விழுங்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் எல்லாருக்கும் எளிமையிலியலும் பூவும் நீருமிட்டு நால்வர் தந்த நற்றமிழால் பாடி வழிபாடு செய்தலே சிறந்த வழிபாடு. இதற்குரிய சூழல் உருவாக வேண்டும் என்பது நமது பெருவிருப்பம். திருக்கோயில் வழிபாட்டில் பயனற்ற மரபு தவறிய வழிகளில் நிதியைச் செலவழிக்காது சிக்கனம் கையாளப் பெறவேண்டும். எஞ்சிய தொகையை இறைவனின் கருணைக்கு ஆளாக்கக் கூடிய உயிர்வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு உரிய ஆக்கப் பணிகளில் செலவிடவேண்டும்.

வழிபாட்டில் இறைவன் ஏற்றுக்கொள்ளுவது வழிபடுவோரின் தூய அன்பினையேயாம். வழிபடுவோரால் செய்யப்படும் வழிபாட்டுத் துணைகள் அவனுடைய அன்பை வெளிப்படுத்தும் புறக்கருவிகளேயாம்.

இவ்வுண்மை வருமாறு!

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலோம் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பால்வியாமே.

—10 திருமந்திரம்—

ஒவ்வொரு திருக்கோயிலும், திருக்கோயில் அமைந்துள்ள ஐந்து மைல் வட்டத்திற்குள் உள்ள எல்லா மக்களையும் அந்தக் கோயிற்கு உரிமையுடைய மக்களாக ஏற்றுப் பதிவு செய்யவேண்டும். அவர்களின் நலன்களைப்

பேணி வளர்த்துப் பாதுகாக்கும் பெட்டகமாகத் திருக்கோயில்கள் அமையவேண்டும். அக்கோயிலைச் சார்ந்த மக்கள் நலமார வாழ்ந்து நன்றுடையானைச் சூழ்ந்து ஊனினிக்க, உயிரினிக்கப் பாடிப் பரவி மகிழ்ந்து வாழ்ந்திடுதல் வேண்டும். இதுவே உண்மையான சமய அமைப்பு. இன்றே நம்முடைய திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் காணி, பூமி, அண்டா, சட்டி உடைமைகளின் பட்டியல் புத்தகம் உண்டு. இல்லாதுபோனாலும் இந்து மத அறநிலைய இலாகா விடாது. சமய நிறுவனங்களின் பொருள்நிலை வளருமியல்புடைய ஆன்மாக்களின் அருளாதாரத்திற்கு அடிப்படையாகும். இதனை மறந்து பொருளாதாரம் போற்றிப் பயனென்ன ?

நம்முடைய திருக்கோயில்கள் திருமடங்கள் காலத்தினால் தோன்றிய சமய அமைப்புக்கள் அனைத்தும் ஓரணியில் ஒருங்கு இணைக்கப்பட்ட ஓரமைப்பாக உருப்பெறுதல் வேண்டும். இவைகளை மையமாகக் கொண்ட பொருளாதாரமும் மனித சத்தியும் ஒருமுகப் படுத்தப்பெற வேண்டும். நம்முடைய சமுதாயத்தின் ஏழ்மையையும் வறுமையையும் மாற்ற வேண்டும். நம்முடைய சமுதாயத்திற்குப் பயிற்றிப் பல கல்வி தரவேண்டும். உற்ற பிணிக்கு மருந்து தரவேண்டும். ஆறுதலற்று அலமரும் பொழுது அணைத்து ஆதரவு கூறித் தேற்றிட நாடெங்கும் நம்முடைய சமயத் தொண்டர்கள், கையில் வலிமையும் நெஞ்சில் தொண்டுணர்வும் உயிரில் சிவசிந்தனையும் தாங்கித் திருத்தொண்டு செய்தல் வேண்டும். சைவத் தமிழ் மகனுக்கு இது புது நெறியோ ? இல்லை, தொன்மை நெறி. திருவீழிமிழலையில் கண்ட பஞ்சம் கனிவுறு தொண்டால் மாற்றப்பெறவில்லையா ? கண்ணுதற் கடவுளும் தோள்கொடுக்கவில்லையா ? திருச்செங்குன்றூரிற் கண்ட நடுங்கு குளிர் சுரம் மாற்றவில்லையா ? செங்குன்றூர் மேயபிரான் துணை செய்யவில்லையா ? நான்மாடக் கூடலில் தாழ்வான பன்றிக்குட்டியின் பசியும் பொறுத்திடாது தாய்ப்பன்றியாகவே வந்துதித்த கருணையின் திருமேனியை வழிபடும் நமது சமுதாயத்தில் வறுமையும் பிணியும் நமக்கு ஒரு அறைகூவல் அல்லவோ ? அன்பு

கூர்ந்து அனைவரும் எண்ணுங்கள். நம்முடைய நல்லூ மூழ்ல் இந்த நூற்றாண்டின் பொற்புடைய வரலாற்றுச் சின்னமாகத் தோன்றியுள்ள தமிழ் நாடு தெய்வீகப் பேரவையை அரண் செய்யுங்கள். இனி அதனையே நமது சமயவழிப்பட்ட சமுதாயத்தில் மையமாக விளங்கும் வகை காணுங்கள்! தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அருளரசு வீற்றிருந்தருளும் தருமை யாதீனத் திருவருள் திரு மகாசந்நிதானம் அவர்கள் தெய்வீகப் பேரவையின் தலைமையேற்றிருக்கிறார்கள். அது நமது பேறு. புண்ணியத்தின் புண்ணியம். அவர்க ளுடைய தண்ணளியால் தெய்வீகப் பேரவை செழிப்புற வளர்ந்து மேன்மை கொள் சைவ நீதி உலகெலாம் பரவும் என்று நம்புகின்றோம். உலகம் உணர்வால் ஒன்றுபட்டு, உய்யும் நெறியின் பொருளால் இரண்டேயாகும். இதற்கு அம்மையும் அப்பனும் சான்று. தெய்வீகப் பேரவையை வளர்க்கும் பெரும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிற தருமையாதீனக் குருமுதல்வரோடு நெஞ்சார்ந்த உணர்வி னாலும் உறவினாலும் ஒன்றுபட்டு உருவாகும் சிந்தனைக் கெல்லாம் உணர்வுறு வடிவம் தரும் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர் திருவருள் திரு மகாசந்நிதானம் அவர் களின் தண்ணளியை என்னென்பேம்! இந்த இனிய சூழலில் பல திருமடங்கள் இணைய உருப்பெற்றுள்ள தெய்வீகப் பேரவை வாழ்க வாழ்க! வளர்க, வளர்க அதன் பணிகள்!

இன்றைய தமிழக அரசு சமயத்துறையில் எத்தகையது? என்ற வினாத் தொடக்கத்தில் எழுந்ததுண்டு. ஆனால் தலை சிறந்த சிந்தனையாளரும் அறிஞரும் எல்லார் இசைவினில் இன்பம் காணும் பண்பாளருமாகிய அறிஞர் அண்ணா அவர்கள் தமக்குச் சமயத்தில் வெறுப்பில்லை என்றும் அஃது எப்படி இருக்க வேண்டுமென்பதே இப்பொழுதுள்ள கேள்வி என்றும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அண்ணாவின் அரு மைத் தம்பியும் நடமாடும் பல்கலைக் கழகமென விளங்கும் நம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அறநிலைய ஆட்சித் துறை அமைச்சுப் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். நாட்டி லும் சமயத்துறைச் சிந்தனை வளர்ந்திருக்கிறது. அதிலொரு புதிய பார்வை வேண்டும் என்ற உணர்ச்சியும் ஏற்பட்டிருக்

கிறது. இந்த உணர்ச்சியைத் தூண்டி வளர்த்த பெருமையில் மறைமலையடிகள், தமிழ்த்தந்தை திரு. வி. க., கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. சமயத்திற்கு உள்ளிருந்தும் உள்ளில்லாமல் வெளியிலிருந்துங் கடுமையாக விமர்சனம் செய்து தூண்டிவிட்ட பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் உண்டு. எப்படியோ வாழ்வுக்கிசைந்த சமயம் தேவை என்ற உணர்வு மேலோங்கி வளர்ந்திருக்கிறது. இதே கேள்வியை அடுத்த தலைமுறையிலும் கேட்க விடாமல் அறிஞர் அண்ணா அவர்கள் தெய்வீகப் பேரவையிடம் பெற்ற திருமடங்களின் தலைவர்களையும் இன்னும் பிற தக்க சமயச் சான்றோர்களையும் கலந்து ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று அவர்கள் மீதுள்ள நம்பிக்கையினாலும் அன்பினாலும் விரும்பிக் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த சைவ சித்தாந்த மகா சமாச மாநாட்டிற்குத் தலைமையேற்கும் திருவாசகமணி நமது அருங்கலைக்கோன் கே. எம். பாலசுப்ரமணியம் அவர்களுக்கு சைவத் தமிழ் உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தமிழினத்தின் காப்பாக உள்ள திருக்குறளையும் திருவாசகத்தையும் உலகுக்குத்தந்த முதல் தமிழ் மகன் இவரே யாவர். இவருக்கு முன் பாரதிவாக்கு பொய்யாகவே இருந்தது. வள்ளுவனை உலகம் எடுத்துக்கொண்டிருந்ததே தவிர தமிழகம் எடுத்து வழங்க வில்லை. இவரே முதன் முதலில் வழங்கியவர். மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம் என்ற பாட்டு நடைமுறைக்கு வரவேண்டுமென்று மனமார எண்ணுகின்றவர். அதற்குரிய தகுதி சாலவுமுரியர். அவர்தம் பணி உலகு தழுவிய பணியாக வளரும் காலம் அண்மையிலிருக்கிறது என்று கூறி வாழ்த்துகின்றோம்

இந்த மாநாட்டில் கொடியை உயர்த்திக் கொள்கை உயர்த்துபவர் நமது அன்பிற்கும் பாராட்டுதலுக்குமுரிய தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை நெறியாளர் ஏ. இராதாகிருஷ்ணன் அவர்கள். நாம் அவரை ஆணையர் என்று குறிப்பிடாமல் நெறியாளர் என்று குறிப்பிடுகின்றோம். சட்டப்படி அவர் ஆணையாளர். வாழ்க்கையில்

நெறியாளர்; இனிய இயல்பினர்; ஆர்வம் நிறைந்த நெஞ்சினர்; அவர்தம் இனிய சேவையால் அறநிலையத்துறை செழிக்கும் என்று நம்புகிறோம். அறநெறியும் செழிக்கும். மற்றும் மாநாட்டில் செந்தமிழ்ப் புலமையிலும் சிவநெறிப் பான்மையிலும் சிறந்து விளங்கும் அறிஞர்கள் கலந்து கொள்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் எம் வாழ்த்துக்கள் மீண்டும் காலத்தின் தேவையெனத் தோன்றிச் சிவநெறியினைப் பேணி வளர்த்த பெருமையினையுடைய சமாசத்திற்கும் சிறப்பாக அதன் தலைவர் திருமிகு கோ மு. முத்துச்சாமி பிள்ளை அவர்களுக்கும் மற்றும் எல்லா உறுப்பினர்களுக்கும் அன்பர்களுக்கும் நமது வாழ்த்துக்கள்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"
"அண்ணா மலைஎம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி"

---

# மதிப்புரை

---

## மூத்த நாயனார் திரு. இரட்டைமணிமாலை

கபில தேவநாயனார் செய்த இப்பதினொராந்திருமுறைப் பிரபந்தம், அருஞ் சொற்பொருளுடன் யாழ்ப்பாணத்து வேலடை மேற்கூர் சேதுபதி பொன்னையா அவர்கள் மனைவியாகிய செல்லம்மை நினைவாக வெளியிடப் பெற்றது. விலை முதலியன குறிப்பிடப் பெறவில்லை. அம்மையார் கையறு நிலையாகப் பாடல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இம்முறையில் நினைவுமலராக திருமுறைகள் வெளியிடுதல் திருமுறைகளைப் பரப்புவதில் நல்ல தொண்டாகும். (மு. அ.)

## செங்கோட்டுப் பள்ளு

மங்கலம் உவமை நகர் பொன்னுச் சிதம்பரம் பிள்ளை என்னும் செல்லைய பாரதி பாடியது. வேலம்பாளையம் இரா. தெய்வசிகாமணிக் கௌண்டர் அவர்களுடைய

ஆராய்ச்சி உரையோடு கவிஞர் நா. கந்தசாமி பதிப்பித்தது. பழகு தமிழ்ப்பதிப்பகம், மல்லசமுத்திரம், சேலம் மாவட்டம். விலை ரூ. 3-50.

முருகப் பெருமான் தலங்களைக் குறித்த பள்ளுப் பதிகங்கள் சில. குறிப்பிடத்தக்கது, பழனி, வையாபுரிப் பள்ளு. இது அடுத்த பள்ளாகும். 930 பாடல்கள் கொண்டது. வெளிவந்த பள்ளுப் பிரபந்தகளுள் மிக நீண்டது என்று சொல்லுவது பொருத்தும். நூல்செய்த காலம் கி. பி. 1818-25 ஆகலாம. இவ்வாசிரியர் இந்நூலன்றி வேறு பூசல் காதல் முதலியன பாடினர் என்றும் அறிகிறோம். நூலில் பிற்காலத்திலிருந்து குருக்கள், செட்டியார் முதலிய மக்கள் பலரைக் குறிப்பிட்டிருக்கிறார். பெரும்பான்மையும் நூலானது. சம்பிரதாயமான முறையிலேயே செல்லுகிறது. ஆங்காங்கு பிற்காலத்துப் புலவர்கள் தங்கள் தங்கள் ஊர்களைப் புகழ்ந்து பாடிய பிரபந்த வகைகளில் இதற்கும் ஒரு சிறப்பான இடம் உண்டு. ஆசிரியர் அவையடக்கத்தில் கூறுகிறபடி அண்ணல் பிரபந்தம் ஆகையாலே அனைவருக்கும் செவிக்கமுதம் ஆகும்.

(மு. அ.)

---

## 1968 நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த சமாஜத் தேர்வில் வெற்றிபெற்றவர்கள் விவரம் வருமாறு:—

### சைவப் புலவர் தேர்வு

| | எண் | பெயர் | | வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | 179 | கி. சடகோபன், திருப்பனந்தாள் | | I |
| 2 | 180 | அ. சீனிவாசன், | do | II |
| 3 | 185 | பசுவை சாந்தலிங்கம், சென்னை | | II |
| 4 | 187 | சி. கந்தையா, சுன்னாகம் | | II |
| 5 | 173 | செ. கோவிந்தசாமி, திருப்பனந்தாள் | | III |
| 6 | 174 | ச. இராமமூர்த்தி, | do | III |
| 7 | 175 | பா. முனியமுத்து | do | III |
| 8 | 176 | N. கிருஷ்ணபிள்ளை, | do | III |
| 9 | 177 | கா. கோ. பெரியசாமி, | do | III |
| 10 | 178 | க. சுப்பராயன், | do | III |

| | | | |
|---|---|---|---|
| 11 | 182 | எஸ். திருமலையப்ப பிள்ளை, வீரவநல்லூர் | III |
| 12 | 188 | கருதையா பரமேஸ்வரி, தெல்லிப்பழை | III |
| 13 | 193 | கணபதிப்பிள்ளை வேல்முருகு, மட்டக்களப்பு | III |

திரு. கி. சடகோபன் அவர்கள் முதல் வகுப்பில் வெற்றிபெற்றுள்ளதால் அவருக்கு அதற்குரிய பரிசுத் தொகையாக நம சமாஜ அன்பர் ஒருவர் வைத்துள்ள மூலதனத்திலிருந்து வரும் வட்டித்தொகையாகிய ரூ. 50/- (ஐம்பதினையும்) பரிசாகக் கொடுத்துள்ளோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## இளஞ் சைவப்புலவர் தேர்வு

| எண் | | பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 1 | 630 | ஆறுமுகம் தாமோதரம் பிள்ளை, நாவற்றான், இலங்கை. | I |
| 2 | 627 | வயித்திலிங்கம் செல்வத்துரை, இருபாலை, கோப்பாய் | III |

# சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

## இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6–50) யாப்பருங்கலக்காரிகை (3-50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்–5–00-கழகம்)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை (0-75 நாவலர்) கந்தர் கலிவெண்பா (1.50-கழகம்) கந்தர் அநுபூதி (0–60-நாவலர்) திருக்குறள் அறத்துப்பால் (6-50-நாவலர்) பரிமேலழகர் உரையுடன். சுந்தரர் தேவாரம் முழுவதும் (1–30-நாவலர்)

3. சாத்திரம் : திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1-50-கழகம்) உண்மை விளக்கம் (2-75-கழகம்) திருவருட்பயன் (0-30-கழகம்) கொடிக்கவி, வினாவெண்பா (கழகம்)

4. உரைநடை : சைவத்தின் சமரசம் (திரு. வி.க.) வாகீசர் அல்லது மெய்யுணர்தல். (சிவக்கவிமணி-1-50 கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2-50 கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுக நாவலர்-3-00) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்-3-50)

## சைவப் புலவர்

1. இலக்கணம் : தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்-நாவலர் 6-00) சொல்லதிகாரம் (சேனாவரையம்-நாவலர் 3-50) பொருளதிகாரம் (இளம்பூரணம்-நாவலர் 9-50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்-நாவலர் 0-60)

2. இலக்கியம் : பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுதும்-3-50. காசிமடம், திருப்பனந்தாள்.) சமபந்தர் தேவாரம் முழுவதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (நாவலர் 1-50) ஒன்பதாம் திருமுறை முழுவதும் (சமாஜம் 1-00)

3. சாத்திரம் : சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2-75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை-நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (கழகம)

4. உரைநடை : சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்-கழகம்-6200) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவகுருநாத பிள்ளை-கழகம் 1-75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார், அம்பை நூலகம்) பெரிய புராண சூசனம் நாவலர் 0-75)

## சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இனஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவா தேர்வுக்கு ரூபாய் நான்கும பதிவுக் கட்டணம் ஆகும. விண்ணப்பம் அனுப்பும் இறுதிநாள் 30—9—69. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும சனி, ஞாயிற்றுக்கிழமைகளில நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர் 2. வயது 3. எழுத விரும்பும் தேர்வு 4. தேர்வு எழுத விரும்பும் இடம் 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப்பெற்றிருக்க வேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக்குறியில் காணப்பெறும் இடங்களில் கிடைக்கும். அவைகளின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சியந்திரசாலை 300, தங்கசாலைத் தெரு, சென்னை–1. 2. தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம், பிராட்வே, சென்னை–1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை–33. என்பதாகும்.

## சித்திரைத் திங்கள் சிறப்பு நாள்கள்

6 (18-4-69) பரணி–சிறுத்தொண்டநாயனார் விழா
8 (20-4-69) உரோகிணி–மங்கையர்க்கரசியார் விழா
10 (22-4-69) திருவாதிரை–விறன்மிண்ட நாயனார் விழா
18 (30-4-69) அத்தம்–உமாபதி சிவாச்சாரியார் விழா
19 ( 1-5-69) சித்திரை–இசைஞானியார் விழா
20 (2-5-69) சுவாதி–திருக்குறிப்புத்தொண்டர் நாயனார் விழா
28 (10-5-69) சதயம்–திருநாவுக்கரசு நாயனார் விழா

## பிற செய்திகள்

நம் சமாஜப்பேரன்பர்களுள் ஒருவராகிய திரு. அ. சோம சுந்தரஞ் செட்டியார் எம். ஏ. அவர்கள் திருவுருவச்சிலை திறப்புவிழா (13—3—69) அன்று எஸ். ஐ. வி. ஈ. டி. கலைக் கல்லூரியில் கௌரிபாக்கத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. நாவலர் நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் நம்செட்டியார் அவர்கள் திருவுருவச்சிலையைத் திறந்துவைத்து அவர் அறச் செயலைப் பெரிதும் போற்றினார்கள். திருமுறைக்காவலராய் வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டும் வள்ளற்பெருமான் கலைக்காவலராயும் அளப்பருநிதியை அள்ளிக்கொடுத்து கலை வளர்த்த மேன்மையை அவ்விழாவுக்கு வந்திருந்தோர் யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். நம செட்டியார் அவர்கள் நம் சமாஜத்திற்கும் டிரஸ்டு ஏற்படுத்தி திருமுறைகளைப் பரப்பி வருவது கண்கூடு நம் சமாஜ டிரஸ்டுக்குரிய அக் கடைகளின் மேல் சமாஜ அலுவலகம் வைக்கத்தக்க நிலையில் அக்கடைகளைப் புதுப்பித்துத் தற்போது இரண்டிடங் களிலுள்ள சமாஜ அலுவலகங்களை அவ்விடத்தில் அமைக்கச் செய்து இன்னும் நன்கு பலருக்கும் பயன் படத்தக்க நிலையில் சமாஜ அலுவலகம், நூல்கள் பிற நம் சமாஜத் தொண்டுகள். சிறக்க வழிகளைக் கோலித்தருமாறு வேண்டுகின்றோம் செய்தக்க செய்து நம் சமாஜத் தொண்டுகள் மேன்மேலும் சிறப்புற்றோங்க அவர்கள் நமக்கு உறுதுணையாயிருந்து ஊக் குவார்களென எதிர்பார்க்கின்றோம். நம் சமாஜத்தின் தொண்டுகளைப் பழங்காலத்திலிருந்து இன்றுவரை நேரே கண்டுகளித்தபேறு பெற்றுள்ளவர்களுள் நம் செட்டியார் அவர் கள் தலையாயயிடத்தைப் பெறுவார் என்பது திண்ணம். அப் பெரியார் அத்தகைய பழம் பெரு சமயநிலைய மேம்பாட்டுக்குச் செய்யத்தகக இவ்வொப்பற்ற தொண்டினையும் செய்தருள வேண்டுகின்றோம்.

அத்திறப்புவிழாவின் நினைவாக நம்செட்டியார் அவர்கள் வரலாறு அவரைப்பற்றிய பாராட்டுரைகள் அடங்கிய திரு வுருவச்சிலை திறப்பு விழா மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றுள்ளது.

## சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பு.

திருச்சிமாவட்டம் லால்குடியில் தம்பாச்சியா பிள்ளை அறநிலயத்துல் (திருத்தவத்துறை) 15—5—69 முதல் 29-5-69 முடிய 15-நாள்களுக்கு சைவசித்தாந்த சாத்திரப் பயிற்சி வகுப்பு நிகழும். திருக்கோயில் ஆசிரியர் சித்தாந்த

புலவர் மணி திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த "சிவப்பிர காசம்" என்னும் நூலிற்கு விளக்கம் தந்து காலையும் மாலையும் வகுப்பினை நடத்துவார்கள். தமிழ் வித்துவான், புலவர் பட்டம் பெற்றவர்களும் தமிழ் எம். ஏ. பட்டம் பெற்றவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கத் தகுதியுடையோராவர். இரு வேளை உண்டியும் உறையுளும் கட்டணமின்றி வழங்கப் பெறும். கிடைத்தற்கரிய இவ்வாய்ப்பினைத் தமிழறிஞர்கள் பலரும் பெற்றுப் பயன்படுத்திக் கொள்வார்களாக. இவ் வகுப்பில் பயில விரும்புவோர் 30-4-69க்குள் மனுச்செய்து இசைவுபெற்றுச் செல்லவேண்டும்.

முகவரி: —

திரு. ஜி. வரதராசப்பிள்ளை, பி. ஏ.,

7, வடக்குவீதி, லால்குடி,

திருச்சிமாவட்டம்.

என்பதாகும்.

செங்கற்பட்டு மாவட்டம் நரசிங்கபுரம் திருமுருகன் திருக்கோயில் மண்டலாபிடேக விழாவும் வள்ளலார் வார வழிபாட்டு ஆண்டு விழாவும் 14-3-69 வெள்ளியன்று மிகச் சிறப்புற நிகழ்ந்தது காஞ்சி திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் தலைமையில் திரு. சடாபதி தேசிகர்; திரு. சண்முகஞ் செட்டியார், திரு பொன. சண்முகனார், வித்துவான் அம்பை சங்கரனார், பண்டித நடேசனார், சண் பகவல்லியம்மையார் ஆகியோர் சமய விரிவுரையாற்றினர். விபூதிவித்தகர் தனபால் சுவாமிகள் குழுவினரின் சமய முன்னேற்றம் பற்றிய நாடகம் மிகவும் மேன்மையுற விருந்தது.

24-3-69ஆந்தேதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கும்பகோணம் பெரிய மடத்தில் சுஷ்யர்களுக்கு லிங்கதார ணமும் சிவதீட்சையும் செய்து வைக்கப்பட்டன. காலை 9 மணிக்கு ஸ்ரீ விரபத்திர சுவாமிக்கு அபிஷேக ஆராதனை

யும் ஸ்ரீ சாந்ததேவ சாரங்கதேசிகேந்திர சுவாமிகள் பாத பூஜையும் மகேஸ்வர பூஜையும் நடைபெற்றன. மாலை 7 மணிக்குக் காஞ்சிபுரம் சித்தாந்த வித்தகர் உயர்திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ. எல். டி. அவர்கள் "காரைக்கால் அம்மையார்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினார்கள். ஸ்ரீ சாந்ததேவசாரங்கதேசிகேந்திர சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

புரசைத் திருநெறிக்கழக 97 ஆம் திங்கள் வழிபாடு 30-3-69 அன்று புரசை கங்காதரேச்சுரர் ஆலயத்தில் மாலையில் சிறப்புற நிகழ்ந்தது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் காஞ்சிச் சிவதல வாரவழிபாடு தக்கேசப்பெருமான் திருக்கோயிலில் 16-3-69 ஞாயிறன்று நிகழ்ந்தது. ஒழுக்க வாக்கம் சைவப்பிரசங்கமணி வித்துவான் திரு. க. சுப்பராய முதலியார் அவர்கள் தக்கேசப்படலம்பற்றி விரிவுரையாற்றினார்கள்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் சார்பில் சைவப் புலவர் மாநாடும் பட்டமளிப்பு விழாவும் 8-4-69, 9-4-69 ஆகிய இரு நாள்களிலும் பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தன. விழாவின் நினைவாக 'திருவுந்தியார்' என்னும் நூலும் 'சைவம்' என்னும் கவிதை நூலும் வெளியிடப்பெற்றன. சைவப்புலவர் திரு. சித்திவிநாயகம், சைவபூஷணம் திரு. ந. ம. சிவப்பிரகாசம், சைவப் புலவர் பண்டிதை தங்கம்மா அப்பாகுட்டி, திரு. பெ. திருஞானசம்பந்தன் எம். ஏ., எல். டி. ஆகியோர் விரிவுரையாற்றினர். இம் மாநாட்டில் சென்றயாண்டு நிகழ்ந்த நம் சமாஜ சைவப் புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகளில் வெற்றிபெற்றோர்க்கு சமாஜ நற்சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. சித்தாந்த வித்தகர் என்னும் சிறப்புப்பட்டம் புலவர் கருணாலய பாண்டினார் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. இரவு கலையரங்கமும், இருநாள்களும் நிகழ்ந்தன. இச்சங்கத்தின் சமயத் தொண்டுகள் மென்மேலும் சிறப்புறத் திகழ்வதாகுக.

நம் சமாஜச் சார்பில் பங்குனி மாதச் சிறப்புக்கூட்டங்கள் 6-4-69 ஞாயிறன்று சித்தாந்தப் புலவர் குலசை ப. இராமநாத பிள்ளை அவர்கள் தலைமையில் குன்றத்தூரிலும் மாங்காட்டிலும் சிறப்புற நிகழ்ந்தன.

அன்று காலை குன்றத்தூர் முருகன் கோயில், கந்தழீச்சுரர் கோயில், திருமால் கோயில், சேக்கிழார் திருக்கோயில்களில் வழிபாடுகள் நிகழ்ந்தன. சைவ மக்களின் வழிபாட்டு நெறிபற்றித் தலைவர் திரு பிள்ளையவர்கள் விளக்கிப்பேசினார்கள். சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துச்சாமி பிள்ளையவர்கள் கூட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள்.

நடுப்பகல் சேக்கிழார் திருமடத்தில் மாகேச்சுர பூசை சிறப்புற நிகழ்ந்தது. அன்று பிற்பகல் 3 மணிக்கு திருநாகேச்சுரப்பெருமான் திருக்கோயில் வழிபாட்டினை அறங்காவலர் மாணிக்க முதலியார் அவர்கள் சிறப்புற உடனிருந்து நடத்தி வைத்தார்கள். பிற்பகல் 5 மணிக்கு மாங்காடு சென்று அங்கு காமாட்சியம்மன் திருக்கோயிலிலும், ஈசுரன் கோயிலிலும் வழிபாடுகள் நிகழ்ந்தன. பின்னர் சிவசண்முகானந்த சபையில் சமய விரிவுரைக் கூட்டம் நிகழ்ந்தது. குலசை திரு. ப. இராமநாத பிள்ளை, சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துச்சாமி பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், அம்பை. இரா. சங்கரனர், கொ. நீ. சிங்காரவேலு முதலியார், மா. ப. தியாகராச முதலியார், திரு. குருசாமி பிள்ளை, பி. செ. சண்முகம்பிள்ளை ஆகிய பெருமக்கள் விரிவுரையாற்றினர். இம்மாதக் கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்து உதவிய குன்றத்தூர் திரு. பாலசுப்பிரமணியன் முதலியோர்களுக்கும் மாங்காடு திரு. பொன்னம்பலம் ஆகிய பெருமக்களுக்கும் சமாஜச் சார்பில் நன்றிசெலுத்திக் கொள்கின்றோம். ஒரே நாளில் இரண்டு மூன்று ஊர்களுக்கு வழிபாடும் சமய விளக்கமும் கூறத்தக்க நிலையில் அங்கங்குள்ள சைவப் பெருமக்கள் கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்வார்களாயின் சமாஜச் சார்பில் யாதொரு கைமாறும் எதிர்பாராது சமயத்தொண்டாற்ற சமாஜத்தினர் காத்திருக்கின்றனர். ஆகவே அன்பர்கள் அங்கங்கு மாதக் கூட்டங்கள் நடத்தமுந்திக்கொள்வார்களாக.

---

## சமாஜ வெளியீடுகள்

| | ரூ. | பைசா. |
|---|---|---|
| திருவாசகம் (எட்டாம் திருமுறை) | 1 | 00 |
| திருவிசைப்பா, திருப்பல்லாண்டு (ஒன்பதாம் திருமுறை) | 1 | 00 |
| சமாஜ 63ஆம் ஆண்டு விழா மலர் | 1 | 00 |
| காயசித்தி | 1 | 00 |
| திருமந்திரச் சம்பிரதாயம் | 1 | 00 |
| சைவ சமயச் சொற்பொழிவுகள் | 2 | 00 |
| ஞானியாரடிகள் நினைவுமலர் | 1 | 00 |
| முருகன் முந்நூல் 0 40 அறுபத்துமூவர் | 0 | 06 |
| வைர விழா மலர் 2 0 அறப்பயிற்சிமாலை | 0 | 50 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள் | 0 | 50 |
| திருமயிலையும் பூம்பாவையும் | 0 | 50 |
| முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு 0 75 பிரதோஷ வழிபாடு | 0 | 20 |
| நான் நம்புவன சில 0 10 விநாயகர் வழிபாடு | 0 | 20 |
| கூட்டுவழிபாட்டுப் பாமாலை | 0 | 20 |
| திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி—பொன் விழா வெளியீடு | 1 | 25 |
| கந்தரனுபூதி—யந்திர உரையுடன் | 1 | 25 |
| சிவஞானபோதம்—தெளிவுரையுடன் | 0 | 50 |
| திருவெம்பாவை—விசேட உரையுடன் | 0 | 75 |

### பாம்பன் – ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள் தற்போது கிடைக்கக்கூடியவை :

| | | |
|---|---|---|
| சைவ சமய சரபம் | 2 | 50 |
| நாலாயிரப் பிரபந்த விசாரம் | 1 | 00 |
| சேந்தன் செந்தமிழ் மூலமும் உரையும் | 1 | 50 |
| செவியறிவுறூஉ | 0 | 20 |
| பாம்பன்–ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் | 1 | 50 |
| சிறுநூற்றிரட்டு | 1 | 25 |
| சிவஞான தீபம் | 0 | 50 |

---

நம் சமாஜ முன்னாள் செயலாளர் திரு. S. வடிவேலு பிள்ளை பி. ஏ., எல் டி. அவர்கள் இரண்டாம் திருமகனார் திரு. V. சிவகுமார் அவர்கள் 15—8—69 சனிக்கிழமை இரவு தம் 33ஆம் வயதில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். திரு. சிவகுமார் அவாகள் அக்கவுண்ட்ஸ் ஜெனரல் அலுவலகத்தில் சென்னையில் பணியாற்றினாகள். தம் தந்தைக்குறுதுணையாயிருக்க வேண்டிய காலத்து இறையருள் அவரை இவ்வுலகத்தினீக்கியது மிகவும் வருந்தத்தக்கது. "ஊட்டும் ஊழ் எங்குற்றாலும் உருத்து வந்தூட்டிடாதோ" என்பதை மனத்துட் கொண்டு இறையருள் விட்ட வழி அவனை நினைந்து மன அமைதி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே திரு. S. வடிவேலு பிள்ளையவர்கட்கும் மற்றுமுள்ள குடும்பத்தினருக்கும் சமாஜத்தினர் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் மன அமைதி பெற்றிலங்கவும் வேண்டுகின்றனர்.

எல்லாம் வல்ல ஒப்பற்ற பெருமான் காலம் சென்ற அந்தச் செம்மலின்னுயிர் நற்பேறு பெற்றிலங்க அருள்பாலிக்க வேண்டி வழுத்துகின்றோம்.

---

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.